# பட்டினத்தார் பாடல்களில் வாழ்வியல் தத்துவம்

முனைவர்.த.புவனேஸ்வரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி
தூத்துக்குடி-2

13

**ஆய்வுச்சுருக்கம்:**

பட்டினத்தார் இவ்வுலக வாழ்வினை வெறுத்து, உடல், பொருள், ஆன்மாவுக்கு முக்கியத்துவம் கொடுக்காது எந்நிலையிலும் சிவநெறியையே தன் தாரக மந்திரமாகக் கொண்டவர். இந்த உடல் அழிந்து போகக் கூடியது. மண், பெண், பொன்னுக்கு ஆசைபட்டு இவ்வுலக வாழ்வினை அழித்துவிடக்கூடாது. மனித வாழ்வினில் உய்வதற்கு வழி மனதினால் இறைவனை முப்பொழுதும் வணங்குவதேயாகும். எண்ணமும், செயலும் இறை நினைவே உணர்தல் வாழ்வியல் உண்மையாக தம் பாடல்களின் வாயிலாக தெளிவுபடுத்தியுள்ளார் பட்டினத்தார்.

**Abstract**:

Pattinathar hates the life of this world though love and does not give importance to the body,material and soul in any situation and has shiva as  his mantra.through his songs human life is false and this body can perish. Don’t destroy the life of this world by desiring the earth and the girl. The way to bathe in human life is to worship God all the time with the mind. Pattinathar has made it clear through his songs that thought and action are God’s thoughts and realization of life.

**திறவுச்சொற்கள்:** Spiritual Life – ஆன்மீக வாழ்வு, Cosmic Life – பிரபஞ்ச வாழ்வு

**முன்னுரை:**

வேதாந்தக் கருத்துக்கள், பக்திச்சுவை, அனுபவச்செறிவு நிரம்பப்பெற்ற பட்டினத்தார் பாடல்கள் **பட்டினத்தார் பாடல் திரட்டு** என்ற பெயரில் உலகறியப்பெற்றவை. நிலையாமை தத்துவத்தை மனிதன் உணர வேண்டும் என்பதை ‘காதறுந்த ஊசியும் வாராது காண் கடை வழிக்கே’ என்று உணரச்செய்தவர். வெண்காடர் எனும் இயற்பெயர் கொண்ட பட்டினத்தார் தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்கியுள்ள தத்துவச் சிந்தனை நிறைந்த பாடல்கள் எண்ணற்றவை.

அவற்றின் வாயிலாக நாம் நம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் உண்மைகள் குறித்துக்காண்போம்.

**பட்டினத்தார் வரலாறு:**

பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் பட்டினத்தார் பூம்புகார் எனும் காவிரி பூம்பட்டினத்தில் தோன்றியவர். அன்பினில் விளைந்த ஆரமுதாகிய சிவபெருமான் கோயில் கொண்ட திருவெண்காட்டினில் திருவெண்காடருக்கும், சிவகலை அம்மையாருக்கும் வளர்ப்பு மகனாக மருதப்பிரான் எனும் திருப்பெயரோடு சிவபெருமான் வளர்ந்து தீட்சை பெற்று மகாலிங்கத்தில் சாந்நித்தியமாயினார். மருதப்பிரான் சிவபெருமானாக அருளிச்செய்த வேண்டுதலுக்கிணங்க திருவெண்காடர் பட்டினத்துப்பிள்ளையாராக துறவறம் மேற்கொண்டார். சீகாழி, சிதம்பரம், திருவேங்கடம், திருக்காளத்தி, திருவாலங்காடு முதலிய திருப்பதிகளைத் தரிசித்து பதிகம்பாடி திருவொற்றியூரையடைந்து சிவலோகப் பதவியடைந்தார்.

**மனம் எனும் அம்பலத்தில் எழுந்தருளும் ஈசன்:**

மனமானது எண்ணங்களால் நிறைந்தது. வாழ்வின் இன்ப துன்பங்களை மனமே ஏற்றுக் கொள்ளும். மனம், வாக்குக்கு எட்டாத அரூபமான சொரூபனை மனதில் ஏற்று ஆனந்த தாண்டவம் செய்யும் நடராஜ மூர்த்தியைத் திரிகணமும் ஒத்து தரிசிக்க வேண்டும்.

“ அலகைத் தேரி னலமரு காலின்
உலகப் பொய் வாழ்க்கையை உடலையோம்பற்க” (கோயில் திருஅகவல் - 1:5)

கானல் நீரும், சுழற்காற்றும் உடைய அழிவுள்ள இந்த பிரபஞ்ச நிலையினை போன்ற பிரபஞ்ச வாழ்க்கையினையும், சரீரத்தையும் போற்றி வளர்க்காதிருப்பாய் என்று குறிப்பிட்டுள்ளார் பட்டினத்தார்.

“ பிறந்தன இறக்கும் மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்---- ” (கோயில் திருஅகவல் - 1:10)

பிறந்த உயிர்கள் அனைத்தும் இறந்தே தீரும். உருவமும், பெயரும் மறைந்து போகக்கூடியது. பிரிந்தவை சேரவும், சேர்ந்தவை பிரியவும், தோன்றியவை யாவும் மறையவும், மறைந்து போன அனைத்தும் பின் தோன்றவும் செய்யும். இவை அனைத்தையும் உணர்ந்தவர் இறைநிலையை உணருவர்.

**சரீர அசுத்தங்கள்:**

மனித வாழ்வில் ஐம்புலன்களுக்கு முக்கியத்துவம் அளித்து வாழ்கின்றோம். கண்ணின் வழியாக பீளையும், நீரும் வெளிவரும். காதின் வழி குறும்பி வெளிப்படும். மூக்கின் வழியே சளியும், சலமும் வெளிவரும். வாய் வழியாக கோழையும் எச்சிலும் கூடி வெளிவரும். இவ்வுடல் இறுதியில் எலும்பு மிச்சமாகின்றன. இவ்வளவான பலமலங்களையும் தன்னகத்தே கொண்ட சரீரத்தால் கொண்டாடும் வாழ்க்கை தமக்கு ஆபாச வாழ்க்கையாக தெரிகின்றது என்று வாழ்வியல் நிலையினை எடுத்துரைக்கின்றார் பட்டினத்தார்.

“ பீளையும் நீரும் புறப்படு மொருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீருந் தவழு மொருபொறி
உமிழ்நீர் கோழை ஒழுகு மொருபொறி
வளியு மலமும் வழங்கு மொருவழி ----” (கோயில் திருஅகவல் - 1:30)

**கலகப்பாதகக் கண்ணியர்:**

சில பெண்கள் இடையாலும், நடையாலும், உடையாலும் ஆடவர்களது சிந்தையைக் கெடுத்துத் தட்டியெழுப்பும் தூதுவர் போன்று விளங்குவதால் அவர்களைப் பட்டினத்தார் கலகப்பாதகக் கண்ணியராக குறிப்பிட்டுள்ளார்.

“ காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுட னாடுங்
காதலுங் கருத்துமல் லால்நின் னிருதாட்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்து” (கோயில் திருஅகவல் - 2:5)

**கபடமிக்க மனிதவாழ்வு:**

மனத்தின் வழிபோய் எளியனைத்துன்புறுத்துங் கனாப்போன்ற இந்த உலகத்து வாழ்க்கையில், மேலான பொருளினை உணரப்பெறாத குற்றமுள்ள மனமும், மாயையில் தோன்றி அதன் சேர்க்கையால் வருத்தமுறும் கொழுப்பிலூறும் புழுப்போல் வதியும் சிந்தையும், கபடமும், பாவமும் பழிப்புக்குக் காரணமான தீய எண்ணமும், குற்றமும், அழுக்காறும் நிறைந்த மறதியும், கோபத்தினால் விளையும் சச்சரவும், மரணமும், துன்பமும், வியாதியும் பொருந்தும் உடல் என்று மனித உடலைப் பட்டியலிடுகிறார். அத்தகைய சரீரத்தில் வெண்மையான காளையை வாகனமாகக் கொண்டுள்ள எம்பெருமானை ஏற்றுக்கொண்டு அவன்வழி அடைக்கலமாதல்

மக்கள் கடமை என்று வாழ்வின் மகத்துவத்தை எடுத்தியம்பியுள்ளார்.

**நிச்சயமற்ற வாழ்வு:**

உலகப்பற்றானது மாயை. இந்த மாய எண்ணத்தில் ஊரும், பேரும், உறவினர்களும், தாய், தந்தை, பெண்டிர், புத்திரர் செல்வமும் நிச்சயமற்றது, அழிந்து போகக்கூடியது என்று எடுத்துரைக்கின்றார் பட்டினத்தார்.

“ ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்” (திருஏகம்ப மாலை-12)

உணவிற்காக வாழும் வாழ்வு வீணானது. உணவை அளவோடு உண்டு, துறவியர்களுக்கு உணவளித்து வாழ்தலே சிறந்த வாழ்வாகும் என்பதனை,

“ பருத்திப் பொதியினைப் போலேவயிறு பருக்கத் தங்கள்
துருத்திக் கறுசுவை போடுகின்றார் துறந்தோர் தமக்கு” (திருஏகம்ப மாலை-15)

இந்த வாழ்வானது நாய் போன்ற தன்மைத்து, இப்பிறவியில் நாய் உடல் எடுப்பினும் தன்னைக் காக்கும் தலைவனுக்கு காவல் காத்து, வேட்டையாடி தனக்கு தேவையானதை அபகரிக்கும். மனிதனும் மனித உடல் தாங்கிப் பிறந்து வேண்டிய திரவியங்கள் பெற்று, காய்த்தலில்லா மரம் போலவும், நீரில்லாத் தடாகமும், கற்பசுவும் போன்று யாருக்கும் பயன்படாத மனித வாழ்வினை வாழ ஏன் பிறப்பெடுக்க வேண்டும் காஞ்சிப்பதிவாழும் ஏகாம்பரநாதனிடம் வேண்டுகிறார்.

**திருவொற்றியூரப்பனை வழிபடல்:**

மனித வாழ்வின் இறுதியில் மரணம் நமக்கு எய்துகிறது. இறுதி மரண வாழ்வானது இன்பமாக அமைய சிவபெருமானை வழிபடுதல் நலம் பயக்கும். மரணத்தின் போது கோழையடைந்து கண்கள் சுழன்று செருகி, உணர்வழிந்து, சரீரம் பொய் பட்டழியும் போது அடிமை ஓர் வரம் கேட்கின்றேன் என்று பட்டினத்தார் புலம்புகின்றார். தாம் மரணவாயிலில் பயணிக்கும் போது, விபூதி பூசி, கைக்கூப்பித் தொழுது பஞ்சாக்கரத்தையும் செபிக்க அருள்புரிவாயாக என்று இறைவனை வேண்டுகிறார்.

“ ஐயுந் தொடர்ந்து விழியுஞ்செருகி அறிவழிந்து
மெய்யும்பொய்யாகி விடுகின்றபோ தொன்று வேண்டுவன் யான்
செய்யுந் திருவொற்றி யூரையடையீர்திரு நீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணி ஐந்தெழுத்து ஓதவுங் கற்பியுமே” (திருசெங்காடு .64)

ஆகாரம், மைதுனம், நித்திரை இம்மூன்றையும் நாளடைவில் மிதப்படுத்தி சாதகம் செய்தல் மெத்த உத்தமமாகும் என்பதை வாழ்வில் நாம் பின்பற்றவேண்டிய வழிமுறையாகக்

குறிப்பிட்டுள்ளார்.

**இறைவனை அடையும் வழி:**

திருமுலர் குறிப்பிடும் "அன்பின் வழியது உயிர்நிலை" என்ற கூற்றினையே பட்டினத்தாரும் ஏற்றுக்கொள்கின்றார்.

" செல்வரைப்பின்சென்று சங்கடம்பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டி பரிதவியாமற் பரானந்தத்தின்;
எல்லையிற்புக்கிட ஏகாந்தமாயெனக் காமிடத்தே
அல்லலற்றென் றிருப்பேன்அத்தனே கயிலாயத்தனே" (திருக்கைலாயம்.80)

தினம்தவறாது பிரபுக்களைத் தொடர்ந்தே என் துன்பங்களை எல்லாம் எடுத்தோதியும், பல்காட்டி கெஞ்சியும் வருந்தாதப்படிக்கு, என்னைச் சிவானந்த வெளிக்கண்ணே குவித்து ஏகாந்தமாய்த் துன்பமின்றி இருக்குமாறு எனக்கு அருள் புரிவாயாக என்று இறைவனிடம் வேண்டுகின்றார்.

**தொகுப்புரை:**

பொய், புரட்டு நிறைந்த இந்த மனித வாழ்வில் பொன், போகம், செல்வம் இவைகளுக்கு முக்கியத்துவம் அழிக்காமல், அழிந்து போகக்கூடிய இந்த உடலால் ஆதியாகிய பெருமானை வழிபட்டு, வாழ்வினில் மேன்மையடைய வேண்டும் என்பதை பட்டினத்தார் குறிப்பிடுகின்றார். புலனடக்கம், மன ஒழுக்கம் ஆகியவற்றை மதித்துப் போற்றி வாழாதவர்களின் வாழ்க்கை பயனற்றது என்று கூறியிருக்கின்றார். இறைவனை வழிபடுவதால் நமக்குக் கிடைப்பது மிகப்பெரிய நன்மை. இறைவனை வழிபட முயற்சி செய்யாதிருப்பது பெருங்கேட்டை விளைவிக்கும் என்பது போன்ற அரிய கருத்துச் செல்வங்களை பட்டினத்தார் பாடல்களில் நீக்கமற நிறைந்திருப்பதைக் காணலாம்.

**துணைநூற்பட்டியல்:**


1. ஸ்ரீ சாமிநாத தேசிகேந்திர சிவயோகி : பட்டினத்தார் பாடல்கள், மூலமும் உரையும், சகுந்தலை நிலையம், மண்ணடி, சென்னை-1.
2. . ஜனகன் : தத்துவச்சித்தர் பட்டினத்தார்,கங்கை புத்தக நிலையம், தி-நகர், சென்னை
3. அனவரத விநாயகம் : சைவ சித்தாந்த வரலாறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.